(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 24 PTM 206**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

எம்.ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் — நேரம் : 3 மணி நேரம்

தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

பகுதி – அ **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. உயர்திணைச் சொல் எத்தனை பிரிவுகளை உடையது?
   (அ) மூன்று (ஆ) நான்கு (இ) இரண்டு (ஈ) ஆறு
2. வேற்றுமையின் வகைகள் எத்தனை?
   (அ) ஐந்து (ஆ) ஏழு (இ) மூன்று (ஈ) நான்கு
3. அண்மை சொல்லில் 'அன்' ஈறு எவ்விதம் மாறும்?
   (அ) உகரம் (ஆ) ஈகாரம் (இ) அகரம் (ஈ) இகரம்
4. காலம் எத்தனை வகைப்படும்?
   (அ) மூன்று (ஆ) நான்கு (இ) இரண்டு (ஈ) ஏழு
5. உறு, தவ, நனி - இச்சொற்கள் எப்பொருளில் வரும்?
   (அ) அண்மை (ஆ) மிகுதி (இ) முரண் (ஈ) சிறப்பு

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. உயர்திணை என்மனார் .....................சுட்டே
7. முறைப்பெயர்க் கிளவி எவ்எழுத்தைப் பெற்று வரும்?
8. ஓம்படைக்கிளவி இதன் பொருளைச் சுட்டுக.
9. ஒருமை வினைமுற்றுகளைக் குறிப்பிடுக.
10. தொல்காப்பியம் குறிப்பிடும் பொருள்கோள் வகைகள் எத்தனை?

**பகுதி** – **ஆ** (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.** (K3)

11. (அ) பால்பகுப்பு குறித்து எழுதுக.

    (அல்லது)

    (ஆ) வண்ணச் சினைச்சொல் - விளக்குக.
12. (அ) வேற்றுமையின் பெயர்களைக் குறிப்பிடுக.

    (அல்லது)

    (ஆ) ஆக்கப்பொருளில் அமையும் வேற்றுமைகளை எழுதுக.

**(த.பி.பா.)**

***ETHICAL PAPER***

13. (அ) விளியேற்கும் மெய் ஈறுகள் எவை? சான்று தருக.

(அல்லது)

(ஆ) சொல்லின் வகைகளை எடுத்துரைக்க.

14. (அ) வினைச் சொல்லின் இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) காலமயக்கம் குறித்து எழுதுக.

15. (அ) அரவப் பொருளில் (ஓசை) அமையும் உரிச்சொற்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) இயற்சொல்லை விளக்குக.

## பகுதி – இ (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.** (K4 & K5)

16. (அ) திணை பால் குறித்து விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) வழக்கு குறித்து நூற்பாவுடன் விளக்குக.

17. (அ) எழுவாய் வேற்றுமை அறுவகைப் பண்புகளை நூற்பாவழி விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) நான்காம் வேற்றுமை எவ்வெவ்ப் பொருளில் அமையும் என்பதை விளக்கி வரைக.

18. (அ) இ, உ, ஐ, ஓ எனும் உயிரெழுத்துக்கள் உயர்திணையில் விளியேற்கும் மரபினை விளக்குக.

(அல்லது)

(ஆ) நிலப்பெயர் முதலாக அமைந்த பாலறி உயர்திணைப் பெயர்களை விளக்குக.

19. (அ) வினையெஞ்சுகிளவி குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மன், தில் - இவ் இடைச்சொற்கள் எப்பொருளில் அமையுமென விவரி.

20. (அ) உரிச்சொல்லின் இலக்கணத்தை நூற்பாவழி விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) செய்யுளுக்குரிய நான்கு வகைச் சொற்களை விளக்கி வரைக.